**சுற்றறிக்கை இலக்கம் : PRE/2024/50**

**எனது இலக்கம் :-** TR/PRE/CIR/2024
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை, இராஜகிரிய.
2024.08.28

TR - 11

**அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும்**
**அனைத்து திணைக்களங்கள் / நிறுவனத் தலைவர்களுக்கு,**

**சனாதிபதித் தேர்தல்கள் - 2024.09.21**
**தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற அலுவலர்களுக்கு கடமை புகையிரத ஆணைச்சீட்டுக்களை வழங்குதல்.**

2024.09.21ஆம் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தல் கடமைகளுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள தங்களது அமைச்சின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் அலுவலர்கள் தேர்தல் கடமைகளுக்காக நியமனம் செய்யப்பட்டுள்ள மாவட்டத்திற்கு செல்வதற்காக கடமை புகையிரத ஆணைச்சீட்டை கோருவாராயின் அக்கோரிக்கையின் பிரகாரம் அவர்களுக்கு கடமை புகையிரத ஆணைச்சீட்டுக்களை வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு தயவன்புடன் வேண்டிக்கொள்கின்றேன். அந்த அனுமதிச் சீட்டுக்களை வழங்குவதனை தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள புகையிரத ஆணைச் சீட்டுக்கள் வழங்குதலுடன் தொடர்புடைய ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும்.

02. ஆணைச் சீட்டுக்களை விநியோகிக்கும் போது கீழ் குறிப்பிட்டிருக்கும் விடயங்கள் தொடர்பாக உங்கள் விசேட கவனத்தை செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

02.1 திணைக்கள குறியீட்டு இலக்கமாக 5422/1 இறப்பர் இலச்சினையைப் பொறிப்பதற்குப் பதிலாக தெளிவாக கையால் எழுதவும்.

02.2 கடமையின் தன்மை "2024.09.21ஆம் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தல்கள் கடமை" எனக் குறிப்பிடவும்.

02.3 செலவுத் தலைப்பு 20 - 1 - 1 - 7 - 1409

03. ஆணைச்சீட்டை வழங்கும் அலுவலரின் பதவியைக் குறிப்பிடும் இடத்தில் ஆணைச்சீட்டில் கைச்சாத்திட்ட அலுவலரின் பதவி முத்திரையைப் பொறித்து அதன் கீழ் "தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சார்பாக" என எழுத்தில் எழுதவும்

04. இதன் கீழ் வழங்கப்பட்ட அனைத்து ஆணைச் சீட்டுக்களையும் செலுத்தி தீர்ப்பதற்காக புகையிரதத் திணைக்களத்தினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும். ஆதலால் தேர்தல் கடமைகளுக்காக வழங்கப்படுகின்ற புகையிரத ஆணைச்சீட்டுக்களுக்காக ஆணைச்சீட்டுக்களை வழங்கிய அமைச்சு/ திணைக்களம்/ நிறுவனம் பணம் செலுத்த வேண்டியதில்லை.

05. தேர்தல் கடமைகளுக்காக வழங்கப்படுகின்ற அனைத்து புகையிரத ஆணைச்சீட்டுக்கள் தொடர்பான விபரத்தை இத்தோடு இணைக்கப்பட்டுள்ள மாதிரிக் கடிதத்தின் பிரகாரம் தயாரித்து தேர்தல் முடிவடைந்து இரண்டு வாரங்களுக்குள் எனக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைப்பதற்குத் தயவு கூர்ந்து நடவடிக்கையெடுக்கவும்.

06. இந்த சுற்றறிக்கையின் ஒரு பிரதியை உங்கள் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களுக்கு அனுப்பிவைப்பதற்கும் தயவன்புடன் நடவடிக்கையெடுக்கவும்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

**பிரதிகள் :**

| | |
|---|---|
| 01. கணக்காய்வாளர் தலைமை அதிபதி<br>02. மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்) | தயவுடன் தகவல்களுக்காக |
| 03. தலைமை நிதி அலுவலர் - இலங்கை புகையிரத சேவை<br>04. தலைமை நிதி அலுவலர் - தேர்தல் ஆணைக்குழு<br>05. தலைமைக் கணக்காளர் - தேர்தல் ஆணைக்குழு<br>06. மேலதிக/ பிரதி தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்)<br>07. அனைத்து மாவட்ட பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள்<br>08. தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் -<br>09. கணக்காளர் (கொடுப்பனவு) | தயவுடன் தகவல்களுக்காகவும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும |

எனது இல :

திகதி :

**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்,**
தேர்தல்கள் ஆணைக்குழு,
சரண மாவத்தை
ராஜகிரிய

**சனாதிபதித் தேர்தல்கள் - 2024.09.21**
**தேர்தல் கடமைகளில் கலந்துகொண்ட பணியாட்குழுவினருக்கு வழங்கப்பட்ட கடமை புகையிரத ஆணைச்சீட்டுக்கள்**

2024.09.21 ஆம் திகதி நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல் கடமைகளுக்காக நியமனம் செய்யப்பட்ட அலுவலர்களுக்கு இந்த அமைச்சினால்/ திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கடமை புகையிரத ஆணைச்சீட்டுக்கள் தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

02. இந்த ஆணைச்சீட்டுக்களுக்கான பற்றுச்சீட்டுக்களை உங்கள் செலவுத் தலைப்புக்களின் கீழ் செலுத்தித் தீர்ப்பதற்காக பின்வரும் தகவல்களை தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

.........................................

செயலாளர்/ திணைக்களத் தலைவர்

(பதவி முத்திரையைப் பொறிக்கவும்)

........................................ அமைச்சு/ திணைக்களம்

| (1) ஆணைச்சீட்டு வழங்கப்பட்ட திகதி | (2) அலுவலரின் பெயர் | (3) ஆணைச்சீட்டு இலக்கம் | (4) புகையிரத நிலையம் | |
|---|---|---|---|---|
| | | | பயணம் துவங்கிய புகையிரத நிலையம் | பயனம் முடிவுற்ற புகையிரத நிலையம் |
| | | | | |